6. கவன ஈர்ப்பு

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை மற்றும் மருத்துவ விடுப்புத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை மற்றும் மருத்துவ விடுப்புத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

கடந்த 10 ஆண்டுகளாக தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நலிவினைத் தொடர்ந்து இக்கழகத்தில் நிலவி வரும் நிதி நெருக்கடி காரணமாகவும், கடந்த 2015 முதல் இக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை தொகை மற்றும் செப்டம்பர் 2015 முதல் இக்கழகத்தில் பணிபுரியும் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மருத்துவ விடுப்பு ஊதியமும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. அதன்படி இக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற 503 பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட

வேண்டிய பணிக்கொடை தொகைக்காக ரூ.10,44,45,068/–ம் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மருத்துவ விடுப்புத் தொகைக்காக ரூ.59.31 இலட்சமும் தேவைப்படுகிறது.

கடந்த 2 வருடங்களாக தேயிலைத் தூளின் சராசரி விற்பனை விலை ரூ.75/– ஆகக் குறைந்துள்ளது. ஆனால், இக்கழகத்தின் உற்பத்திச் செலவு தோராயமாக ரூ.100/– வரை எட்டியுள்ளது. மேலும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியம், விதிகளின்படி மாற்றியமைக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி காரணங்களினால் இக்கழகத்தின் மொத்த உற்பத்திச் செலவினங்கள், தேயிலைத் தூளின் விற்பனை விலையினைக் காட்டிலும் அதிகரித்துள்ளது.

மேலும், உலகளாவிய பொருளாதார மாற்றத்தின் காரணமாக தேயிலைச் சந்தையில் ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சியினைத் தொடர்ந்தும்,தேயிலை உற்பத்தி மூலப்பொருட்களின் அபரிமிதமான விலை ஏற்றம் மற்றும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதிய உயர்வு மற்றும் இதர இடுபொருட்களின் விலை உயர்வு காரணமாகவும் இக்கழகம் தொடர்ந்து நட்டத்தைச் சந்தித்து வருகிறது. இந்நட்டத்திலிருந்து கழகத்தினை மீட்கவும், கழகத்தில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய நிதி நெருக்கடியினைச் சமாளிக்கவும், இக்கழகத்திற்குத் தேவைப்படும் உரிய சிறப்பு நிதி உதவி அளிப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்களுக்கும் ஒருவருக்கு ஒரு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதிநீர் ஆணையம் உருவாக வேண்டுமென்று அல்லும் பகலும் உழைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வைத்தவரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் போராடி, இன்று காவேரி நதிநீர் ஆணையம்*

[திருமதி வி. கஸ்தூரி வாசு] [2018 ஜூலை 5

அமைத்து, முதல் கூட்டத்திலேயே 31.24 டி.எம்.சி. தண்ணீரை திறந்துவிட பாடுபட்டு வெற்றி வாகை சூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோலவே, 8—7—2018 அன்று ஆழியாறு பழைய ஆயக்கட்டு விவசாயிகளுக்காக தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்த எங்கள் மாவட்ட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறையிலுள்ள அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பணிக்கொடை மற்றும் மருத்துவ விடுப்புத் தொகை கிடைக்கப் பெறாததால் அவர்கள் மிகுந்த மனவேதனையுடன் உள்ளனர். இதுகுறித்து பல கோரிக்கைகளை தொழிற்சங்கமும், சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் நானும் அரசுக்கு அளித்துள்ளேன். எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, தேயிலைத் தோட்டக் கழகத்திற்குத் தேவைப்படும் உரிய சிறப்பு நிதியை உடனடியாக விடுவித்து, அவர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையினைப் பெற்றுத்தர வேண்டுமென தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் சார்பாக மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தேயிலைத் தூள் விலை 75 ரூபாய் என்பது மிகவும் குறைவு. பச்சைத் தேயிலையைத் தரமாக எடுத்து, தரமான தேயிலைத் தூளை தயாரித்தால் சராசரியாக 125 ரூபாய்க்கும்மேல் கிடைக்கும் என்பது எங்களுடைய கருத்து.

பிற்பகல் 12—05

மேலும், வால்பாறையிலுள்ள தனியார் தேயிலைத் தோட்டக் கழகத்தில் குறைந்தபட்ச தினக்கூலியாக 308 ரூபாய் 70 பைசா வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் 301 ரூபாய் 20 பைசா வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியார் தேயிலைத் தோட்டக் கழகங்களுக்கு நிகராக அரசு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.311.70—க்குமேல் உயர்த்தி வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2018 ஜூலை 5] [திருமதி வி. கஸ்தூரி வாசு]

மேலும், அரசு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளான சுகாதாரம், மின்சாரம், குடிநீர், மருத்துவ வசதி, கழிப்பிட வசதி, சாலை வசதி ஆகியவற்றை அரசு சார்பில் செய்து கொடுக்க வேண்டும். மேலும், மழைக்காலங்களில் வீடுகளில் ஒழுகும் நிலை உள்ளது. தொழிலாளர்களின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு குளிர்காலங்களில் sweater, shoes, socks, மழையில் நனையாத புத்தகப் பைகள் வழங்கிடவும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: அவர்கள் குடியிருக்கும் வீடுகளைப் பராமரிக்கவும், ஒட்டுமொத்தத் தொழிலாளர்கள் மருத்துவ வசதிக்காகச் செல்லும் வால்பாறையிலுள்ள அரசு பொது மருத்துவமனையை தரம் உயர்த்தி அனைத்து சிகிச்சைகளும் அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்து கொடுக்கவும் வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

***திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அது, முழு விவரங்களும் அடங்கியதாக இல்லை. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகம், தலைவர் கலைஞர் அவர்களால் தாயகம் திரும்பிய தமிழ் மக்களின் மறுவாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம். இதில், கடந்த காலங்களில் 7,000 நிரந்தரத் தொழிலாளர்களும், 13,000 தற்காலிகத் தொழிலாளர்களும் பணிபுரிந்து வந்தனர். தற்போது, அவர்களுடைய எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது. விவர அறிக்கையில் மூன்றாண்டுகளுக்கு மட்டும்தான் பணிக்கொடை கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படியில்லை. கடந்த ஐந்தாண்டு காலமாக பணிக்கொடை, Medical leave with wages அதாவது, மருத்துவ விடுப்புச் சம்பளம் போன்றவை தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய், அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதைப்போல, இந்த நிறுவனத்திடம் உள்ளது, நல்ல young plant; அதைப்போல virgin land. அப்படியிருந்தும், உற்பத்தியான தேயிலை

சரியாக marketing *செய்யப்படாததற்குக் காரணம், அந்த* marketing–*ல் உள்ள* syndicate *மற்றும்* quacks *அதாவது, இடைத்தரகர்களின் ஈடுபாடு ஆகும். மேலும்,* mis–management–*ம் காரணமாக இருக்கிறது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகம் இலாபகரமாக இருந்தது. தற்போது, அது நிதி நெருக்கடியில் தள்ளப்படுவதற்கு முக்கியக் காரணம்,* mis–management–*ம், அந்த* marketing–*ல் நடப்பதும்தான். ஆகவே, இதைச் சீர் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு நிதியை ஒதுக்க வேண்டும். ஏனென்றால்* social justice–*ஐயும், சமூகப் பாதுகாப்புச் சட்டங்களையும் அமல்படுத்தக்கூடியது இந்தக் கழகம். தாயகம் திரும்பிய தமிழ் மக்களின் மறுவாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்டது இந்தக் கழகம். தற்போது இக்கழகம் நிதி நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கினால்தான் சரியாக இருக்கும். ஏனென்றால், இது 1,000 கோடி ரூபாய் சொத்துள்ள ஒரு பொதுத் துறை நிறுவனம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால், நீங்கள் உரையை முடிக்கவே மாட்டேன் என்கிறீர்களே! உரையை முடியுங்கள்.*

திரு. மு. திராவிடமணி: *ஆகவே, சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி கஸ்தூரி வாசு அவர்களும் தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை மற்றும் மருத்துவ விடுப்புத் தொகை வழங்க வேண்டியது குறித்து இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக்*

2018 ஜூலை 5] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

கழகமானது மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளின் மறுவாழ்வுக்காக சமூகப் பொருளாதார நோக்கத்துடன் சாஸ்திரி–சிரிமாவோ உடன்படிக்கையின்படி 1968 ஆம் ஆண்டில் தமிழக அரசால் அரசு தேயிலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, தற்போது TANTEA *என்ற பெயருடன் செயல்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளாவிய பொருளாதார மாற்றத்தின் காரணமாக தேயிலைச் சந்தையில் ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சியினால் தேயிலையின் விலையானது 75 ரூபாயாகக் குறைந்துள்ளது. இதைத் தவிர, விலை வீழ்ச்சி தொடர்ந்து இருக்கக் காரணம், தேயிலை உற்பத்தி மூலப்பொருட்களின் விலை மிக அதிகமாக, அபரிமிதமாக அதிகரித்துள்ளதுதான். பணியாளர்களுக்கு வழங்கப்படுகிற குறைந்தபட்ச ஊதியமும் விதிகளின்படி மாற்றி, உயர்த்திக் கொடுப்பதால் தேயிலைத் தூளின் உற்பத்தி விலை, விற்பனை விலையைக் காட்டிலும் அதிகரித்து தோராயமாக ரூ.100/–ஐ எட்டியுள்ளது.

பிற்பகல் 12–10

மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள், தேயிலைத் தோட்டக் கழகத்தைப் பற்றி இங்கே பேசியபோது, அந்நிறுவனம், தி.மு.க. ஆட்சியில் இலாபகரமாக இயங்கியது என்றும், இப்போது நஷ்டத்தில் இயங்குவது போலவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர், தவறான தகவலை இங்கே தெரிவித்திருக்கிறார். 2008–2009 ஆம் ஆண்டு 1,079 இலட்சம் ரூபாய், 2010–2011 ஆம் ஆண்டு 1,715 இலட்சம் ரூபாய் என தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அந்த நஷ்டம் தொடர்ந்து இன்று வரை நஷ்டமாக வந்திருக்கிறதே தவிர, இது, எங்களால், எங்களுடைய ஆட்சியில் ஏற்பட்டது அல்ல என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிறுவனத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை எப்படி ஈடு செய்வது என்பது குறித்து நான் அளிக்கும் உரிய பதிலை மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து புரிந்துகொள்ள வேண்டும். இருப்பினும், கழகத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை சரி செய்ய வேண்டி, ஏற்கெனவே இருந்த பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றதன் அடிப்படையில், புதிய பணியாளர்களை நியமிக்காமல், 11 தேயிலைக் கோட்டங்கள் என்றிருந்தது

8 தேயிலைக் கோட்டங்களாக மாற்றியமைக்கப்பட்டு, சுமார் 3 கோட்ட மேலாளர்கள் மற்றும் 26 பணியாளர்களின் பணியிடங்கள் குறைக்கப்பட்டதால், இக்கழகத்திற்கு வருடத்திற்கு 125 இலட்சம் ரூபாய் செலவினம் குறைந்துள்ளது. தேயிலைத் தோட்டக் கழகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த 7 பள்ளிகள் மற்றும் அதில் பணிபுரிந்த ஆசிரியர்களும் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதனால், இக்கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 104 இலட்சம் ரூபாய் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டக் கழகத்தின் மேற்பார்வையில் செயல்பட்டு வரும் 3 மருத்துவமனைகள் மற்றும் அவற்றில் பணிபுரிந்த 26 மருத்துவப் பணியாளர்கள் பணியிடங்களை மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஒப்படைக்க உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இக்கருத்துருவினை ஏற்கும்பட்சத்தில், இதன்மூலம் 154 இலட்சம் ரூபாய் செலவினத்தைக் குறைக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, செலவினக் குறைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, தேயிலைத் தோட்டக் கழகம் தற்போது நஷ்டத்தில் இயங்குவதால், எந்தவிதமான புதிய கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. மேலும், வருவாயை அதிகரிக்கும் நோக்கத்தோடு, குன்னூர் சிம்ஸ் பூங்கா, உதகை தாவரவியல் பூங்கா மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் வளாகங்களில் TANTEA நேரடி விற்பனை மையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

மேலும், ஆவின் பாலகங்களைப் போல தனியார்களுக்கு TANTEA தேநீர் விற்பனை நிலையங்களுக்கு உரிமம் வழங்குவதன்மூலமும் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு, விற்பனை விலையை கூடுதலாகப் பெற வேண்டி, தனியார் தேயிலைக்கு இணையாக TANTEA-ன் தரத்தினையும் உயர்த்த தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தேயிலைப் பயிருக்கு உரமிடுவதன்மூலம், 2018–2019 ஆம் ஆண்டில் 64.65 இலட்சம் ரூபாய் வழக்கத்தைவிட கூடுதல் வருவாய் பெற வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இந்த அளவில் நஷ்டமடைந்த நிலையிலும், 2017–2018 ஆம் ஆண்டு அங்கே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்களும், எங்களுடைய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய மாண்புமிகு

2018 ஜூலை 5] [திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]

திருமதி கஸ்தூரி வாசு அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ராமு அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடம் தெரிவித்தபோது, "தேயிலைத் தோட்டக் கழகம் நஷ்டத்தில் இயங்கி வந்தாலும், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த வருடம் தீபாவளிக்காக 20 சதவிகித போனஸ் கொடுங்கள்" என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்போல கருணை உள்ளத்தோடு கூறினார்கள். ஏறத்தாழ 6.30 கோடி ரூபாயை ரொக்கமாகப் பெற்று, UCO வங்கியில் போடுவதற்குரிய சூழ்நிலையை மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் உருவாக்கி, தொழிலாளர்கள் வயிற்றில் பாலை வார்த்து, தொழிலாளர்கள் நலனைப் பேணிக் காக்கும் முதல்வராகத் திகழ்கிறார் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைக்கு இந்த அறிவிப்பு வந்தவுடனே, முதன்முதலாக எனக்கு நன்றி சொன்னவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள். ஊட்டியிலிருந்து, "ரொம்ப நன்றி அண்ணே! மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்" என்று தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு சொன்னார்கள். அதையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நிதி நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு, சீரமைப்பதற்கு மற்றும் சிறப்பு நிதி வழங்குவதற்காக ஒரு சிறப்புக் கூட்டம் கடந்த 21–5–2018 அன்று நடத்தப்பட்டது. இந்நிறுவனத்தை எப்படி நஷ்டத்திலிருந்து மீட்பது என்பதற்கான கருத்துருவை அன்றைய கூட்டத்தில் விவாதித்திருக்கிறார்கள். இந்த நஷ்டத்திலிருந்து இந்நிறுவனத்தை மீட்பதற்காக உரமிடுதல், தொழிற்சாலைகளைப் புதுப்பிக்க புதிய உபகரணங்கள் வாங்குதல், பணிக்கொடை மற்றும் ஓய்வுப் பலன்கள், யூகோ வங்கியின் பணக் கடனை திரும்பச் செலுத்துதல், மூலதனச் செலவுகள், தேயிலை தயாரிக்கத் தேவைப்படும் பொருட்களை வழங்குபவர்களுக்கான கட்டணம், தேயிலைத் தோட்டத்திற்கான மூலப் பொருட்கள் வாங்குதல், ஆக ஏறத்தாழ 40 கோடி ரூபாய் தேவைப்படும் என்கிற ஒரு குறிப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக்

[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] [2018 ஜூலை 5

கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, தீபாவளிக்கு போனஸ் வழங்கியதைப்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தில் அது இருக்கிறது. சூழ்நிலைகள் சரியாக வருகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தை ஈர்த்ததுபோல, தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணிக்கொடை மற்றும் மருத்துவ விடுப்பு, அவர்கள் சொன்ன கணக்கு விவரங்கள் எல்லாம் ஏற்கெனவே எங்களுடைய குறிப்புகளிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய சகோதரி திருமதி கஸ்தூரி வாசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியார் தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலியைவிட, அதாவது 301 ரூபாய்க்கும் மேலாக TANTEA–ல் கொடுக்கப்படுகிறது. எனவே, இதுபோன்ற நடவடிக்கைகள் மூலமாக, இந்த ஆட்சியில் விரைவிலே TANTEA புத்துணர்வைப் பெற்று இலாபத்தில் இயங்குகிற சூழ்நிலையை மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் மேற்கொள்ளவிருக்கிறார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியை அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

7. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016–2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு இவ்வாண்டு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள 5 துறைகளுக்கான 5 அறிக்கைகள், எண் 4 முதல் 8 வரையிலான அறிக்கைகளை அச்சிடப்படாத அறிக்கைகளாக குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*